# கடலூர் மாநகராட்சி

**2022ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 11–ம் நாள் திங்கட்கிழமை காலை 11.00 மணிக்கு கீழ்க்கண்ட பொருட்கள் சம்பந்தமாக கடலூர் மாமன்றத்தின் இயல்புக் கூட்டம் கடலூர் மாமன்ற கூடத்தில் (Council Hall ) நடைபெறும். உறுப்பினர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ள இதன் மூலம் கேட்டுக் கொள்ளப்படுகிறது.**

மாநகராட்சி அலுவலகம்<br>கடலூர்<br>நாள் 07.04.2022

மேயர்,<br>கடலூர் மாநகராட்சி.

## பொருட்கள்

| | |
|---|---|
| 1) | தமிழக அரசால் அமைக்கப்பட்ட சொத்துவரி சீராய்வு செய்வதற்கான குழு பல்வேறு காரணிகளை ஆராய்ந்து தற்போது சொத்துவரி சீராய்வு செய்வது அவசியம் என அரசிற்கு பரிந்துரைத்துள்ளது.<br>15 ஆவது மத்திய நிதி ஆணையம், 2022–2023–ம் ஆண்டு முதல் உள்ளாட்சி அமைப்புகளுக்கான மான்யம் பெறுவதற்கு, மொத்த ஆண்டு மதிப்பில் சொத்து வரி விகிதம் (Floor rate i.e. Rate of Taxation) எவ்வளவு என அறிவிக்கை வெளியிட வேண்டும் எனவும், மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சிக்கு ஏற்றவாறு சொத்து வரி வசூலில் முன்னேற்றம் காண்பிக்க வேண்டும் எனவும் நிபந்தனைகள் விதித்துள்ளது. மேலும், தூய்மை இந்தியா திட்டம் 2.0 மற்றும் அம்ரூட் 2.0 ஆகிய திட்டங்களுக்கு மானிய நிதி பெறுவதற்கு சொத்து வரி / காலிமனைவரி சீராய்வு செய்வது அவசியமாகிறது.<br>அரசாணை (நிலை) எண்.73 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.19.07.2018 மற்றும் அரசாணை (நிலை) எண்.76 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.26.07.2018 ஆகியவற்றில் சொத்து வரி / காலிமனைவரி பொது சீராய்வு மேற்கொள்ள ஆணையிடப்பட்டு, பின்பு அரசாணை (நிலை) எண்.150 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.19.11.2019–ன்படி சொத்து வரி சீராய்வானது நிறுத்தி வைக்கப்பட்டு, சொத்துவரி/காலிமனைவரி சீராய்வு மேற்கொள்வதற்கான வழிகாட்டுதல்கள் வழங்க குழுவும் அமைக்கப்பட்டது. மேலும், இக்குழுவானது சொத்து வரி / காலிமனைவரி சீராய்வு செய்வதற்கான பரிந்துரைகள் வழங்குவதற்கு முன்பு சந்தை மதிப்பு குறியீடு, பணவீக்கம், செலவு பணவீக்க குறியீடு, மொத்த உள்நாட்டு உற்பத்தி போன்றவற்றை பரிசீலித்து பொருளாதார குறியீடுகள் உயர்ந்துள்ள நிலையில் சொத்து வரியில் எந்த உயர்வும் |

இல்லாமலும், உள்ளாட்சி அமைப்புகளில் சொந்த வருமானத்திலும் எந்த உயர்வும் இல்லாமலும், மொத்த வருமானத்தில் சொந்த வருமானத்தின் பங்கு பெருமளவு குறைந்துள்ளதாகவும் அறிக்கை வெளியிட்டுள்ளது.

தற்போது மாநகரங்கள் மற்றும் நகரங்களில் நிர்வாகச் செலவினம், பொருளாதார குறியீடு உயர்ந்துள்ளதற்கு ஏற்ப பலமடங்கு உயர்ந்துள்ளது. மேலும் மாநகராட்சிகளில் அதிகரித்துள்ள நிதித்தேவை, பொது மக்களுக்கு வழங்கப்பட வேண்டிய அடிப்படை வசதிகள், 15வது மத்திய நிதிக்குழுவின் மான்யம் மற்றும் இதர ஒன்றிய அரசின் திட்டங்களுக்கான நிதி பெறுவதற்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள தகுதிகள் போன்றவற்றை கருத்திற்கொண்டும் தமிழ்நாட்டிலுள்ள மாநகராட்சிகள், நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளில் கீழ்க்கண்டவாறு சொத்து வரி/காலிமனைவரி சீராய்வு செய்யலாம் என சொத்து வரி சீராய்வு மேற்கொள்வதற்கான வழிகாட்டுதல் குழு பரிந்துரைத்துள்ளது.

சொத்து வரி / காலிமனை வரி சீராய்வு செய்வதற்கான குழுவின் பரிந்துரைகள் மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் வளர்ச்சிக்கு தேவைப்படும் நிதி ஆகியவற்றை கருத்திற்கொண்டு 2022–2023 முதலாம் அரையாண்டு (01.04.2022) முதல் சொத்து வரி பொது சீராய்வு செய்யலாம். மாநகராட்சிப் பகுதிகளில் கட்டப்படும் குடியிருப்பு கட்டடங்களுக்கு அவற்றின் அமைவிடம், கட்டுமானத்தின் தன்மை மற்றும் பயன்பாடு ஆகியவற்றின் அடிப்படையில் கட்டடங்களின் பரப்பளவுக்கு ஏற்றவாறு 4 வகைகளாக பிரித்து வெவ்வேறு மண்டல மதிப்புகளின் அடிப்படையில் சொத்து வரி சீராய்வு செய்யலாம்.

சொத்து வரி / காலிமனைவரி சீராய்வு செய்வதற்கான குழுவின் பரிந்துரைகள் அரசால் ஏற்றுக்கொள்ளப்பட்டு அரசாணை (நிலை) எண் 53 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நநி4) துறை நாள் 30.03.2022–ல் கீழ்கண்டவாறு அடிப்படை மதிப்பீடு நிர்ணயம் செய்யலாம் என அறிவுரை வழங்கி அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.

**<u>சொத்துவரி</u> :**

**குடியிருப்பு கட்டடங்கள் (Residential Building) :**

| **பரப்பளவு (ச.அடி)** | **உயர்வு செய்வதற்கானகாரணி** |
|---|---|
| <=600 | 1.25 |
| 601 – 1200 | 1.5 |
| 1201 – 1800 | 1.75 |
| >1800 | 2 |

**குடியிருப்பு அல்லாத கட்டடங்கள் (Non - Residential Building) :**

| **வகைப்பாடு** | **உயர்வு செய்வதற்கானகாரணி** |
|---|---|
| தொழிற்சாலைகள் | 1.75 |
| வணிக பயன்பாட்டு கட்டடங்கள் | 2 |
| சுயநிதி பள்ளி மற்றும் கல்லூரி கட்டடங்கள் | 1.75 |

**மண்டல அடிப்படை மதிப்பு நிர்ணயம் செய்வது சம்மந்தமாக மேற்கண்ட பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள உயர்வு காரணிகள் கீழ்கண்டவாறு விவரிக்கப்படுகிறது :**

1) **600** சதுர அடிக்கும் குறைவான பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டிடங்களுக்கு 25% சொத்து வரி உயர்வு செய்யப்படவேண்டும்.

2) **601** முதல் **1200** சதுரஅடி வரை பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டிடங்களுக்கு 50% சொத்துவரி உயர்வு செய்யப்பட வேண்டும்.
3) **1201** முதல் **1800** சதுரடி வரை பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டிடங்ககக்கு 75% சொத்து வரி உயர்வு செய்யப்படவேண்டும்.
4) **1800** சதுரடிக்கு அதிகமாக பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டிடங்களுக்கு 100% சொத்துவரி உயர்வு செய்யப்பட வேண்டும்.
5) வணிக நிறுவனங்களுக்கு / வணிக பயன்பாட்டு கட்டிங்களுக்கு தற்போதுள்ள சொத்து வரியில், வணிக பயன்பாட்டு கட்டடங்களுக்கு 100% சொத்து வரி உயர்வு செய்யப்பட வேண்டும்.
6) தொழிற்சாலை மற்றும் சுயநிதி பள்ளி மற்றும் கல்லூரி கட்டிடங்களுக்கு தற்போதுள்ள சொத்துவரியில் 75% சொத்துவரி உயர்வு செய்யப்படவேண்டும்.
7) காலிமனை வரிவிதிப்பிற்கு, 1 சதுர அடி நிலத்திற்கு தற்போதுள்ள அடிப்படை மதிப்பு 100 சதவீதம் உயர்வு செய்து காலிமனை வரி பொது சீராய்வு செய்யப்பட வேண்டும். மேலும், சொத்து வரிவிதிப்பு செய்யும் போது கட்டிடத்தின் பரப்பளவிற்கு இரண்டு மடங்கிற்கு மேல் உள்ள காலியிடத்திற்கு சொத்து வரியுடன் சேர்த்து காலிமனை வரி வரிவிதிப்பு செய்யப்படவேண்டும்.

<u>**தன்னிச்சையான வருடாந்திர சொத்துவரி சீராய்வு**</u>:

ஏற்கனவே உள்ள சொத்துவரி / காலிமனைவரியில், ஆண்டுதோறும் 6% உயர்வு அல்லது கடந்த 5 ஆண்டுகளின் மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தியின் (GSDP) சராசரி வளர்ச்சி வீதம் இவற்றில் எது அதிகமோ அதன் அடிப்படையில் ஒவ்வொரு ஆண்டும் சொத்துவரி / காலிமனை வரி உயர்வு செய்து சொத்துவரி சீராய்வு செய்யப்பட வேண்டும்.

மேலும், தற்போது வரை மண்டல அடிப்படை மதிப்பு நிர்ணயம் செய்யப்படாமல் விடுபட்டுள்ள சாலைகள், தெருக்கள், சந்துகள் போன்றவை அவற்றின் அமைவிடங்களுக்கு ஏற்றவாறு பட்டியலிட்டு மண்டலங்களும், மண்டல மதிப்புகளும் நிர்ணயம் செய்யப்பட வேண்டும்.

மேலும் கடலூர் மாநகராட்சியில் தற்போதுள்ள நிலையில் கீழ்கண்டவாறு கடன் தொகை / நிதித்தேவை உள்ளது.

| வ. எண். | செலவின வகைப்பாடு | தற்போதுள்ள நிலையில் தேவைப்படும் நிதி (Current Liabilities) (ரூ. கோடியில்) |
|---|---|---|
| 1 | செலுத்தப்பட வேண்டிய நிலுவை மின்கட்டணம் | 4.05 |
| 2 | பிற துறைகளுக்கு செலுத்த வேண்டிய நிலுவைத் தொகை விபரம் | 22.24 |
| 3 | திரும்ப செலுத்த வேண்டிய கடன் நிலுவை விபரம் (டுபிட்கோ, டுபிசெல், பிற) | 45.51 |
| 4 | பணியாளர்களுக்கு வழங்கப்பட வேண்டிய ஓய்வுக்கால பணப்பயன், ஓய்வூதியம் மற்றும் தற்போது பணிபுரியும் பணியாளர்களுக்கு வழங்க வேண்டிய சேமநல நிதி, நகராட்சியின் பங்குத்தொகை மற்றும் பிற பணப்பயன்கள் (நிலுவைத் தொகை) | 3.79 |
| | **மொத்தம்** | **75.59** |

விலைவாசி உயர்வு, பணியாளர்களின் ஊதிய உயர்வு, பொதுமக்களுக்கு செய்ய வேண்டிய அடிப்படை தேவை மற்றும் மாநகராட்சியில் ஏற்படுத்தப்பட்டுள்ள அடிப்படை கட்டமைப்புகளை மேம்படுத்தி பராமரிப்பு செய்தல் போன்றவற்றிற்கு தேவைப்படும் கூடுதல் செலவினம், நகராட்சி செலுத்த வேண்டிய கடன் தொகை மற்றும் பிற துறைகளுக்கு செலுத்த வேண்டிய நிலுவைத்தொகை ஆகியவற்றை கருத்தில் கொண்டும், பொதுமக்களுக்கு சிறப்பான சேவைகளை அளிக்க ஏதுவாகவும் மேற்கண்ட அரசாணையில் அறிவுறுத்தியுள்ளவாறும், **கோயம்புத்தூர் மாநகராட்சி சட்டம் 1981 அத்தியாயம் 5 பிரிவு 118–ல் (பிற மாநகராட்சிகளுக்கு)** குறிப்பிட்டுள்ள வழிமுறைகளைப் பின்பற்றியும், கடலூர் மாநகராட்சியில் கீழ்கண்டவாறு சொத்து வரி / காலிமனை வரி உயர்வு செய்து பொது சீராய்வு மேற்கொள்ள மாமன்றத்தின் அனுமதிக்காக பொருள் வைக்கப்படுகிறது.

1) **600** சதுரஅடிக்கும் குறைவான பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு 25% சொத்துவரி உயர்வு செய்யலாம்.
2) **601** முதல் **1200** சதுர அடி வரை பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு 50% சொத்துவரி உயர்வு செய்யலாம்.
3) **1201** முதல் **1800** சதுரடி வரை பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு 75% சொத்துவரி உயர்வு செய்யலாம்.
4) **1800** சதுரடிக்கு அதிகமாக பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு 100% சொத்துவரி உயர்வு செய்யலாம்.
5) வணிக நிறுவனங்களுக்கு தற்போதுள்ள சொத்து வரியில், வணிக பயன்பாட்டு கட்டடங்களுக்கு 100% சொத்துவரி உயர்வு செய்யலாம்.
6) தொழிற்சாலை மற்றும் சுயநிதி பள்ளி மற்றும் கல்லூரி கட்டடங்களுக்கு தற்போதுள்ள சொத்துவரியில் 75% சொத்துவரி உயர்வு செய்யப்படவேண்டும்.
7) காலிமனை வரிவிதிப்பிற்கு 1 சதுர அடி நிலத்திற்கு தற்போதுள்ள அடிப்படை மதிப்பு 100 சதவீதம் உயர்வு செய்து காலிமனை வரி பொது சீராய்வு செய்யலாம்.
8) ஏற்கனவே உள்ள சொத்துவரி / காலிமனைவரியில், ஆண்டுதோறும் 6% உயர்வு அல்லது கடந்த 5 ஆண்டுகளின் மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தியின் (GSDP) சராசரி வளர்ச்சி வீதம் இவற்றில் எது அதிகமோ அதன் அடிப்படையில் ஒவ்வொரு ஆண்டும் சொத்துவரி / காலிமனை வரி உயர்வு செய்து சொத்துவரி சீராய்வு செய்யலாம்.

மேலும் தற்போது வரை மண்டல அடிப்படை மதிப்பு நிர்ணயம் செய்யாமல் விடுபட்டுள்ள சாலைகள் / தெருக்கள் / சந்துகள் ஆகியவற்றிற்கு கீழ்கண்டவாறு மண்டலங்கள் நிர்ணயம் செய்யலாம்.

| வ. எண் | வார்டு எண் | தெரு பெயர் | சொத்து வரி | | காலிமனை வரி | |
|---|---|---|---|---|---|---|
| | | | மண்டலம் | மதிப்பு ரூ. | மண்டலம் | மதிப்பு ரூ. |
| 1 | 6 | கண்ணன் கார்டன் | C | 1.05 | C | 0.20 |
| 2 | 8 | லோகநாதன் நகர் | C | 1.05 | C | 0.20 |
| 3 | 8 | P.C.சுப்பரமணியன் நகர் | C | 1.05 | C | 0.20 |
| 4 | 9 | சண்முகா நகர் | C | 1.05 | C | 0.20 |
| 5 | 9 | SSR அவென்யூ | C | 1.05 | C | 0.20 |
| 6 | 14 | கணேசன் நகர் | C | 1.05 | C | 0.20 |
| 7 | 14 | அம்மன் நகர் | C | 1.05 | C | 0.20 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 8 | 14 | சிவகலை நகர் விரிவு | C | 1.05 | C | 0.20 |
| 9 | 15 | ரஞ்சன் கோபால் நகர் விரிவு | C | 1.05 | C | 0.20 |
| 10 | 23 | கம்மியம்பேட்டை பைபாஸ் ரோடு | C | 1.05 | C | 0.20 |
| 11 | 29 | ஸ்ரீ மோகன் கார்டன் விரிவு | C | 1.05 | C | 0.20 |
| 12 | 30 | ராம் நகர் | C | 1.05 | C | 0.20 |
| 13 | 30 | கண்ணகி நகர் விரிவு | C | 1.05 | C | 0.20 |
| 14 | 33 | தாஜ் நகர் | C | 1.05 | C | 0.20 |
| 15 | 33 | தண்டபாணி நகர் | C | 1.05 | C | 0.20 |
| 16 | 33 | ஸ்ரீ சக்திவேல் நகர் | C | 1.05 | C | 0.20 |
| 17 | 33 | விஸ்வ கர்மா நண்பர்கள் நகர் | C | 1.05 | C | 0.20 |
| 18 | 33 | ஓம் முருகா நகர் | C | 1.05 | C | 0.20 |
| 19 | 33 | கணபதி நகர் | C | 1.05 | C | 0.20 |
| 20 | 34 | V.I.P கார்டன் | C | 1.05 | C | 0.20 |
| 21 | 34 | மகாலட்சுமி நகர் | C | 1.05 | C | 0.20 |
| 22 | 35 | காந்தி நகர் | C | 1.05 | C | 0.20 |
| 23 | 35 | லேன்டோனா நகர் | C | 1.05 | C | 0.20 |
| 24 | 35 | வீர ஆஞ்சனேயர் நகர் | C | 1.05 | C | 0.20 |
| 25 | 35 | சுனாமி நகர் | C | 1.05 | C | 0.20 |
| 26 | 35 | பழைய சுனாமி நகர் | C | 1.05 | C | 0.20 |
| 27 | 35 | புதிய சுனாமி நகர் | C | 1.05 | C | 0.20 |
| 28 | 35 | சிங்காரவேல் நகர் | C | 1.05 | C | 0.20 |
| 29 | 36 | சுனாமி குடியுருப்பு (பனங்காடு காலனி) | C | 1.05 | C | 0.20 |
| 30 | 44 | A.M.K. கார்டன் | C | 1.05 | C | 0.20 |
| 31 | 45 | காந்தி நகர் | C | 1.05 | C | 0.20 |

**அ.கு.**

1. மேற்படி அரசாணையை மாமன்றம் பதிவு செய்து அனுமதி வழங்கலாம்.
2. மேற்படி அரசாணையின்படி 01.04.2022 முதல் சொத்து வரி / காலிமனை வரி பொது சீராய்வு மேற்கொள்ளலாம்.
3. புதியதாக சேர்க்கப்பட்ட தெருக்களின் மண்டலம், மண்டல மதிப்பு ஆகியவற்றை மாமன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.

**2)**

கடலூர் மாநகராட்சி 1866 ஆம் ஆண்டு தோற்றுவிக்கப்பட்டு 2021 முதல் மாநகராட்சியாக செயல்பட்டு வருகிறது. இம்மாநகராட்சியின் பரப்பளவு 27.69 ச.கி.மீ ஆகும் இதில் 1,73,636 மக்கள் தொகை கொண்ட நகரமாகும்.

இம்மாநகராட்சியில் மூன்று ஈப்பு வாகனங்கள் பயன்பாட்டில் உள்ளது. இவற்றில் TN 31 AB 7285 ஈப்பு வாகனம் 2009 ம் ஆண்டு வாங்கப்பட்டு, ஆணையாளர் அவர்களால்

| | |
|---|---|
| | பயன்படுத்தப்பட்டு வருகின்றது. TN 31 F 7171 ஈப்பு வாகனம் நகராட்சி செயற்பொறியாளர் அவர்களால் பயன்படுத்தப்பட்டு வருகின்றது, TN 31 E 7915 நகர் நல அலுவலர் அவர்களால் பயன்படுத்தப்பட்டு வருகிறது. மேற்படி மூன்று வாகனங்களும் வாங்கி 10 வருடங்கள் கடந்துவிட்டதால் எரிபொருள் செலவீனம் அதிகமாகி மாநகராட்சிக்கு நிதியிழப்பு ஏற்படுகின்றது.<br>தற்போது உள்ளாட்சி தேர்தல் முடிவுற்று மாநகர் மன்றத் தலைவர் அவர்களுக்கு புதிய வாகனம் வழங்க வேண்டியிருப்பதாலும், நகராட்சி ஆணையர் ஈப்பு வாகனம் வாங்கப்பட்டு 11 வருடங்கள் கடந்து விட்டதாலும், இந்நகராட்சிக்கு கூடுதலாக இரண்டு வாகனங்கள் தேவைப்படுகின்றது.<br>இம்மாநகராட்சியின் வாகன தேவையின் அவசர அவசியம் கருதி உடனடியாக Toyota Innova-Cryista வாகனம் – இரண்டு எண்ணிக்கை அரசின் GEM விலை விகிதத்தில் கொள்முதல் செய்திடவும்,, வாகனத்திற்கு கூடுதல் உதிரிபாகங்கள் பொறுத்தவும், நிரந்தர பதிவு எடுக்கவும் மற்றும் ஆயுள் சாலை வரி செலுத்தவும், நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களிடம் நிர்வாக அனுமதி பெறவும், மேற்படி கொள்முதல் பணிக்கான தோராய செலவினம் ரூ.50.00 இலட்சத்தினை பொது நிதியில் மேற்கொள்ளவும் மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது. |
| அ.கு. | மன்றம் அனுமதிக்கலாம் |
| 3) | கடலூர் மாநகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 37 ஏணிக்காரன் தோட்டம் மற்றும் சுனாமி குடியிருப்பு பகுதியில் உள்ள பொதுமக்கள் அப்பகுதியில் உள்ள ஆற்றினை அடிக்கடி கடந்து செல்ல சிரமப்படுவதால், அப்பகுதியில் அமைக்கப்பட்டு வரும் புதிய துறைமுக கட்டுமான பகுதிக்கு அருகாமையில் மேம்பாலம் அமைத்துத் தர கோரிக்கை வைத்துள்ளனர். மேற்படி பகுதியில் உள்ள ஆற்றினை கடந்து அக்கரையில் உள்ள கோயில் மற்றும் மயானத்தினை அப்பகுதி மக்கள் பயன்படுத்தி வருவதினால் அப்பகுதியில் மேம்பாலம் மிகவும் அவசியமான தேவையாக அமைந்துள்ளது. மேலும் பாலம் அமைக்க கோரும் பகுதி கடல் சார்ந்த ஆற்றுப் பகுதியென்பதால், பொதுப்பணித்துறை அலுவலகத்தின் மூலம் பணிமேற்கொள்ள தெரிவித்து கடிதம் அனுப்ப மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. |
| அ.கு. | மன்றம் அனுமதிக்கலாம் |
| 4) | கடலூர் மாநகராட்சிக்குட்பட்ட மஞ்சக்குப்பம் கிராமம், வில்வராயநத்தம் கிராமம், வார்டு 7, பிளாக் 22, நகர நிலஅளவை எண்.1690, 1693, 1694,1695, 1696, 1697, 1698, 1699, 1710/1–ல் 75217.50 ச.மீ. (18.58 ஏக்கர்) பரப்பளவில் புதிய நவீன பேருந்து நிலையம் அமைக்க கடலூர் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் செயல்முறை உத்திரவு ந.க.வி2/16955/2018 நாள் 26.06.2020ல் முன்நுழைவு அனுமதி வழங்கப்பட்டு. அரசாணை எண் 20. நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 25.01.2022ல் நிர்வாக அனுமதி பெறப்பட்டுள்ளது. மேற்படி பணிக்கு பொது மக்கள் –தனியார் கூட்டு பங்களிப்பில் – (PPP Mode) சாத்தியக்கூறு அறிக்கை மற்றும் பரிவர்த்தனை ஆலோசனை சேவை வழங்க Chief Executive Officer, Sree Damodar Consultancy services, Chennai நிறுவனத்திற்கு 18.12.2020ல் வேலை உத்திரவு வழங்கப்பட்டது.<br><br>அரசாணை எண் 20. நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 25.01.2022ல் I & A Fund ன் கீழ் புதிய நவீன பேருந்துநிலையம் அமைக்கும் பணிக்கு நிர்வாக அனுமதி பெறப்பட்டுள்ளது. I& A Fund ன் கீழ் புதிய நவீன பேருந்து நிலையம் அமைக்கும் |

| | |
|---|---|
| | பணிக்கு தற்போதைய விலைவிகிதத்தில் விரிவானதிட்ட அறிக்கை தயார் செய்து ஒப்படைக்க தெரிவிக்கப்பட்டு Chief Executive Officer, Sree Damodar Consultancy services, Chennai நிறுவனத்திற்கு 16.02.2022 கடிதம் அனுப்பப்பட்டதில், சாத்தியக்கூறு அறிக்கை சமர்பிக்க மட்டும் வேலை உத்திரவு வழங்கப்பட்டு சமர்பிக்கப்பட்டுள்ளது என்றும், திருத்திய மதிப்பீட்டில் பணி மேற்கொள்வதற்கு விரிவான திட்ட அறிக்கை, Feasibility report, Structural Design, Elevaton for front view, Cross section and Drawings சமர்பிக்க இயலாது எனவும் தெரிவிக்கப்பட்டது. இதன் காரணமாக தொழில்நுட்ப அனுமதி பெறப்படாத நிலை உள்ளது. எனவே. Chief Executive Officer, Sree Damodar Consultancy services, Chennai நிறுவனத்திற்கு வழங்கப்பட்டுள்ள வேலை உத்திரவினை ரத்து செய்திடவும், தற்போது பேருந்து நிலைய கட்டுமானம் தேவை என்பதால் திருத்திய மதிப்பீட்டில் பணி மேற்கொள்வதற்கு விரிவான திட்ட அறிக்கை, Feasibility report, Structural Design, Elevaton for front view, Cross section and Drawings பெறப்பட வேண்டியுள்ளதால் பணியின் அவசர அவசியம் கருதி மாநகராட்சி மேயர் அவர்களின் முன்அனுமதி பெற்று மேற்கண்ட பணிக்கு விலைப்புள்ளி கோரவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. |
| அ.கு. | மன்றம் அனுமதிக்கலாம் |
| 5) | கடலூர் மாநகராட்சிக்குட்பட்ட வார்டு 34 வசந்தராயன்பாளையம் பிரதான சாலையில் ஏற்கனவே உள்ள சிறுபாலம் குறுகலாக உள்ளதால் மேற்படி பகுதியில் புதிதாக சிறுபாலம் அமைக்கும் பணி ரூ. 6.00 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்வதற்கு நிர்வாகஅனுமதி பெறப்பட்டது. இப்பணிக்கு 24.03.2022ம் தேதி ஒப்பந்தப்புள்ளி கோரியதில் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளுக்கு ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்து மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது. |

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டுவிகிதத்திற்கு |
|---|---|---|
| 1. | திருமதி. ஆர். நவநீதம், கடலூார். | 0.09% மதிப்பீட்டைவிடகுறைவு. |
| 2. | திரு. ஆர். ரவிச்சந்திரன், கடலூார். | 0.52% மதிப்பீட்டைவிடஅதிகம். |

| | |
|---|---|
| | மேற்கண்ட விவரப்படி பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் வ.எண் 1ல் கண்ட திருமதி. ஆர். நவநீதம், கடலூார். என்ற ஒப்பந்ததாரரின் குறைந்த தொகைக்கான ஒப்பந்தப்புள்ளி (0.09%மதிப்பீட்டை விட குறைவு) அளித்துள்ளார். குறைந்த தொகைக்கான ஒப்பந்தப்புள்ளி திருமதி. ஆர். நவநீதம், கடலூார். என்ற ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்கவும், பணியின் அவசர அவசியம் கருதி மாநகராட்சி மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று வேலை உத்திரவு வழங்கியதற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. |
| அ.கு. | மன்றம் அனுமதிக்கலாம் |
| 6) | கடலூர் மாநகராட்சிக்குட்பட்ட மஞ்சக்குப்பம் கிராமம், வில்வராயநத்தம் கிராமம், வார்டு 7, பிளாக் 22, நகர நிலஅளவை எண்.1690, 1693, 1694,1695, 1696, 1697, 1698, 1699, 1710/1–ல் 75217.50 ச.மீ. (18.58 ஏக்கர்) பரப்பளவில் புதிய நவீன பேருந்து நிலையம் அமைக்க Feasibility report, Structural Design, Soil report, Foundation details and Drawings தயார் செய்யும் பணிக்கு 19.03.2022ல் விலைபுள்ளி கோரியதில் பெறப்பட்ட விலைப்புள்ளிகளுக்கு ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்து மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது. |

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டுவிகிதத்திற்கு |
|---|---|---|
| 1. | M/s.TERRA AMATA DESIGN CONSORTIUM, CHENNAI. | ரூ.54,00,000/– + GST 18 % |
| 2. | M/s. JPR AE, CHENNAI. | ரூ.56,16,000/– + GST 18 % |
| 3 | M/s. M-SQAURE, CHENNAI. | ரூ.59,52,960/– + GST 18 % |

மேற்கண்ட விவரப்படி பெறப்பட்ட விலைப்புள்ளிகளில் வ.எண் 1ல் கண்ட M/s.TERRA AMATA DESIGN CONSORTIUM, CHENNAI. என்ற நிறுவனம் குறைந்த தொகைக்கான விலைப்புள்ளி (ரூ.54,00,000/– + GST 18 %) அளித்துள்ளனர்.

மேற்படி நிறுவனத்திடம் விலைகுறைப்பு செய்ய கடிதம் அளித்ததற்கிணங்க கீழ்கண்டவாறு விலைகுறைப்பு செய்து கடிதம் அளித்துள்ளனர்.

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் | விலைகுறைப்புக்கு பின் விலைவிகிதம் |
|---|---|---|
| 1. | M/s.TERRA AMATA DESIGN CONSORTIUM, CHENNAI. | ரூ.50,40,000/– + GST 18 % |

மேற்படி குறைந்த விலைவிகிதம் அளித்துள்ள M/s.TERRA AMATA DESIGN CONSORTIUM, CHENNAI. நிறுவனத்தின் விலைப்புள்ளியினை ஏற்று கீழ்கண்ட பணிகள் மேற்கொள்ளவும், பணியின் அவசர அவசியம் கருதி மாநகராட்சி மேயர் அவர்களின் முன்அனுமதி பெற்று வேலை உத்திரவு வழங்கியதற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**The Scope of works is under follows**.

1. Study and analyse the site boundaries –FMB sketch, on site data, Global Mapper, ArcGIS software etc.,
2. Soil Investigation – Conduct a detailed bore hole testing and identify the required method of Structural designs.
3. Study on connectivity – Identify the existing routes for the buses plying through the Cuddalore (Inbound & Outbound)
4. Analyse the existing facilities – Find out the Shortfalls in the existing terminal.
5. Traffic survey – Identify the Critical Paths / roads leading to the intended site for development of Bus terminus and compute the data for 1 week (16 hours each day). Analyse the data computed to bring out strong recommendations on the road carrying capacities.
6. Projection – identify the required number of bus bays for the next 30 yeas based on the present-day scenario.
7. Ideology – develop a master plan suitable to the bus terminus exploring the possibilities to develop into a modest hub for the public utilization around the clock catering to all the age groups.
8. Terminals design – Arrive at the facilities and needs based on the standards and norms, Formulate the floor plans, elevations, Sections and Views required for understanding the facility
9. Engineering services – Water supply, HVAC, Firefighting , Electrical, SCADA, CCTV, Sewage, STP & SWM.

10. Garage - Identify the usage and needed capacity.
11. Landscape management – identify the suitable development strategies for the landscape management, flora and fauna habitat development.
12. Detailed estimation – Preparation of estimates for all the works recommended along with the cost abstracts required for the Administrative and Technical sanctions.
13. Assistance - -Assist the Municipal Corporation officials in obtaining the sanctions from the appropriate agencies (TUFIDCO and CMA)
14. Operation and management – Develop a structured agenda to maintain the developed facility intact and benefit the public.
15. Funding – Find various opportunities for funding assistance and develop a sustainable model by adopting various revenue parameters.
16. Way forward – adopt proper tendering procedures for contractor identification and execution.

**அ.கு.**

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. மேற்கண்ட செலவினத்தினை பொது நிதியில் மேற்கொள்ளவும், பின் திட்டத்தில் நிதி ஒதுக்கீடு பெறும் பொருட்டு ஈடு செய்யவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**7)**

கடலூர் மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் செயல்படுத்தப்படும் கீழ்கண்ட இனங்களுக்கு 2022–2023 நிதியாண்டிற்கு Consent to operation fees தமிழ்நாடு மாசுகட்டுப்பாட்டு வாரியத்திற்கு செலுத்தப்பட வேண்டும் எனத் தெரிவித்து கடிதம் வரப்பெற்றுள்ளது.

| வ.எண் | விபரம் | தொகை (ரூ,) |
|---|---|---|
| 1 | திருப்பாப்புலியூர் பான்பரி மார்க்கெட் மீன் அங்காடி மையம் Lr. No. F. CUD0155/OS/DEE/TNPCB/CUD/2022. Dt 23/02/2022 | **25,200** |
| 2 | மஞ்சக்குப்பம் ஆடுவதைக் கூடம் Lr. No. F. CUD0465/RS/DEE/TNPCB/CUD/2022. Dt 21/02/2022 | **10,000** |
| 3 | கம்மியம்பேட்டை எரிவாயு தகனமேடை Lr. No. F. CUD0147/GS/DEE/TNPCB/CUD/2022. Dt 22/03/2022 | **10,200** |
| 4 | மஞ்சக்குப்பம் எரிவாயு தகனமேடை Lr. No. F. CUD0385/GS/DEE/TNPCB/CUD/2022. Dt 28/03/2022 | **12,200** |
| | மொத்தம் | **57,600** |

எனவே, மேற்படி அட்டவணையில் கண்டுள்ள இனங்களுக்கு 2022–2023 நிதியாண்டிற்கு Consent to operation fees ரூ. 57,600/– னை நகராட்சி பொது நிதியிலிருந்து தமிழ்நாடு மாசுகட்டுப்பாட்டு வாரியத்திற்கு செலுத்துவதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.கு.**

மன்றம் அனுமதிக்கலாம்

| | |
|---|---|
| 8) | கடலூர் மாநகராட்சியில் வரப்பெறும் மத்திய, மாநில அரசு திட்ட நிதி மற்றும் பொது நிதியின் கீழ் மேற்கொள்ளப்படும் திட்டங்களுக்கான நல பணிகள் அனைத்திற்கும் ஒப்பந்தப்புள்ளி கோர வேண்டியுள்ளது. இவ்வொப்பந்தப்புள்ளிகளை தலைமை செயலகத்தில் உள்ள இயக்குநர் செய்தி மக்கள் தொடர்பு துறை மூலம் மாநில நாளிதழ், மாவட்ட நாளிதழ்களில் வெளியிடவும், செய்தி மக்கள் தொடர்பு துறை மூலம் உள்ளூர் நாளிதழ்களில் வெளியிடுவதற்கும், நகராட்சியில் மேற்கொள்ளப்படும் திட்டப்பணிகள் விபரம், சாதனை மலர், தொழில் மலர் மற்றும் அறிவிப்புகள் உள்ளூர் நாளிதழ்களில் வெளியிடுவதற்கான செலவுகளை மேற்கொள்ளவும் 2022–23ம் ஆண்டிற்கான தோராய செலவினம் ரூ.30.00 இலட்சத்தினை திட்டம் மற்றும் பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. |
| அ.கு. | மன்றம் அனுமதிக்கலாம். |
| 9) | கடலூர் மாநகராட்சிக்குட்பட்ட கடலூர் முதுநகர் மாநகராட்சிக்கு சொந்தமான சால்ட் ஆபிஸ் ரோடு நகரளவை தொகுதி எண்–2, பகுதி எண்–55 மற்றும் நகரளவு எண்கள் – 2743, 2937ல் அமைந்துள்ளது. மேற்படி சாலை நகரளவு எண் 2937ல் 297.80 மீட்டர் நீளமும், நகரளவு எண் 2743ல் 264.20 மீட்டர் நீளமும் ஆக கூடுதல் 562.00 மீட்டர் நீள சாலையாக உள்ளது. மேற்படி சாலையை கடலூர் துறைமுகத்திற்கு பயன்படுத்தும் வகையில் விரிவாக்கம் செய்ய தேசிய நெடுஞ்சாலைத் துறை அவர்களின் கடிதத்திற்கினங்க, கூடுதல் தலைமை செயலாளர் அவர்களின் கடித எண் 4843/எம்ஏ–3(2)/2021–1 நாள் 09.06.2021 மற்றும் நகராட்சிகளின் நிர்வாக இயக்குநரின் கடித எண் 11885/2021/டிபி3 நாள் 28.06.2021ன் படி, மேற்படி சாலையை தேசிய நெடுஞ்சாலைத் துறைக்கு ஒப்படைப்பு செய்ய மேல்நடவடிக்கை எடுக்க அறிவுறுத்தப்பட்டுள்ளது. எனவே, மேற்படி சாலையினை தேசிய நெடுஞ்சாலைத் துறைக்கு ஒப்படைப்பு செய்ய மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. |
| அ.கு. | மன்றம் அனுமதிக்கலாம் |
| 10) | கடலூர் மாநகராட்சிக்குட்பட்ட வார்டு 30 வண்டிப்பாளையம் சூரசம்ஹார தெருவில் அமைந்துள்ள குழந்தைகள் அங்கன்வாடி மையம் மற்றும் கேப்பர்மலை ரோடு காந்தி நகரில் அமைந்துள்ள குழந்தைகள் அங்கன்வாடி மையம் ஆகிய இரண்டு கட்டிடங்களில் புதிதாக ஒருமுனை மின் இணைப்பு பெறுவதற்கு மின்வாரியத்திற்கு கடிதம் அனுப்பவும், அதற்கான தோராய செலவினம் ரூ.10,000/– செலவிடுவதற்கும், இச்செலவினத்தினை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மாநகராட்சி மேயர் அவர்களின் முன்அனுமதி பெற்று மேற்படி தொகை வழங்கவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. |
| அ.கு. | மன்றம் அனுமதிக்கலாம் |
| 11) | கடலூர் மாநகராட்சியில் சொத்துவரி / காலினை வரி பொது சீராய்வு மேற்கொள்ள அரசாணையின்படி, சொத்துவரி / காலிமனை வரி பொது சீராய்வு தொடர்பாக தினசரி நாளிதழ் விளம்பர அறிவிப்புகள், சொத்துவரி / காலிமனை வரிக்கான முதன்மை பதிவேடுகள் தயார் செய்தல் சொத்துவரி, காலிமனைவரி சுயமதிப்பீட்டு படிவங்கள் அச்சிடுதல், நகல் எடுத்தல், வரி விதிப்பாளர்கள் இறுதி, சிறப்பு அறிக்கைகளை கொரியர் மூலம் சார்வு செய்திடவும், மேலும் 2021–2022ம் நிதியாண்டின் Consolidate Demand Register நடப்பு மற்றும் நிலுவை பதிவேடுகள் நகல் எடுக்கப்பட்டு பைண்டிங் செய்யவும், 2022–2023ம் நிதியாண்டிற்கு சொத்து வரி, காலிமனை வரி, தொழில் வரி, குடிநீர் கட்டணம் மற்றும் பாதாள சாக்கடை கட்டணம் கேட்பு அறிவிப்புகள் நகல் எடுக்கவும் மற்றும் வருவாய் |

| | |
|---|---|
| | உதவியாளர்களுக்கு வசூல் செய்ய ஏதுவாக 45 வார்டுகளுக்கு கையெடுகள் நகல் எடுத்து பைண்டிங் செய்யவும் மேலும் சொத்து வரி / காலிமனைவரி பொது சீராய்வு தொடர்பாக இதர பணிகளுக்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.10.00 இலட்சத்துக்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது. |
| **அ.கு.** | 1) மன்றம் அனுமதிக்கலாம்,<br>2) சொத்து வரி / காலிமனை வரி பொது சீராய்வுக்கு ஆகும் செலவினங்களை, வருவாய் நிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம். |
| **12)** | மாண்புமிகு. M.R.K. பன்னீர்செல்வம், வேளாண் மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் அவர்கள் வேளாண்மைக்கான தனி நிதிநிலை அறிக்கை தயார் செய்வது தொடர்பாக கடலூர் மற்றும் விழுப்புரம் மாவட்ட விவசாயிகளுடன் கலந்தாய்வு கூட்டம் 13.03.2022 அன்று மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கத்தில் நடைபெற்றது தொடர்பாக நாளிதழில் விளம்பரம் செய்தமைக்கு கீழ்கண்டவாறு பட்டியல் வரப்பெற்றுள்ளது.<br><br>**வ.எண்** \| **நாளிதழ்** \| **தொகை**<br>1 \| தினகரன் \| ரூ. 43,312/–<br>2 \| தினத்தந்தி \| ரூ. 38,288/–<br>3 \| தினமலர் \| ரூ. 34,800/–<br> \| **மொத்தம்** \| **ரூ.1,16,400/–**<br><br>மேற்படி பட்டியல் தொகை சம்மந்தப்பட்ட நாளிதழிற்கு வழங்கவும், இச்செலவினத்தினை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும், மாநகராட்சி மேயர் அவர்களின் முன்அனுமதி பெற்று மேற்படி தொகை வழங்கவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. |
| **அ.கு.** | மன்றம் அனுமதிக்கலாம் |
| **13)** | இம்மாநகராட்சிக்குச் சொந்தமான குத்தகை இனமான பேருந்து நிலைத்திற்குள் வந்து செல்லும் பேருந்துகளுக்கு தினசரி கட்டணம் வசூலிக்கும் உரிமம் ஏலம் போகாததால் துறை மூலம் வசூல் செய்யப்பட்டு வருகிறது. பஸ்களுக்கு அச்சடித்த டிக்கெட்டுகள் வழங்கப்பட்டு வருகிறது. அச்சடித்த டிக்கெட்டுகளில் 1500 டிக்கெட்டுகள் மட்டுமே இருப்பில் உள்ளதால் டிக்கெட்டுகள் அச்சடிக்க வேண்டியுள்ளது. எனவே கடலூர் கூட்டுறவு அச்சகத்தில் 1 முதல் 50000 டிக்கெட்டுகள் அச்சடித்துக் கொள்ளவும் அதற்கான உத்தேச செலவினம் ரூ.2,00,000/–க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது. |
| **அ.கு.** | 1) மன்றம் அனுமதிக்கலாம்,<br>2) அவசர அவசியங்கருதி மாண்புமிகு மேயர் அவர்களின் முன் அனுமதிப்பெற்று நடவடிக்கை மேற்க்கொண்டதை மன்றம் ஏற்கலாம். |
| **14)** | இம்மாநகராட்சிக்குச் சொந்தமான குத்தகை இனம் எண்.15, தேவனாம்பட்டினம் வெள்ளி கடற்கரை தென்மேற்கில் IUDA திட்டத்தின்கீழ் ஒப்படைக்கப்பட்ட பூங்கா நுழைவுக் கட்டணம் வசூலிக்கும் உரிமத்திற்கு திரு.ஆ.ராதாகிருஷ்ணன் என்பவரால் 2021–2022ம் ஆண்டிற்கு ரூ.1,10,000/–க்கு ஏலம் கோரினார். குத்தகை உரிமம் வழங்கிட 27.12.2021ல் நகர்மன்ற முன்அனுமதிப் பெறப்பட்டுள்ளது. 2021–2022ம் ஆண்டிற்கு குத்தகைத் தொகை (95 நாட்களுக்கு) மற்றும் இதர வரிகள் சேர்த்து ரூ.50,041/– செலுத்தி உரிமம் பெற்றுக் கொள்ள 28.12.2021 மற்றும் 28.02.2022ல் அறிவிப்புகள் அனுப்பப்பட்டது. ஆனால் திரு. |

| | |
|---|---|
| | ஆ.ராதாகிருஷ்ணன் ரூ.50,041/– செலுத்தவில்லை. இம்மாநகராட்சி, 2021–2022 முதல் 2023–2024 முடிய ஆண்டின் பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி அறிவிக்கை பொது நிபந்தனைகள் வரிசை எண்.11ல் கண்டுள்ளவாறு குத்தகை தொகை செலுத்தவோ ஒப்பந்தப்பத்திரம் எழுதி கொடுக்காமலோ அல்லது ஏலநிபந்தனைகளை மீறி நடந்தாலும் உரிமததரர் தான் செலுத்தியிருக்கும் வைப்புத் தொகையை இழப்பது அல்லாமல் உரிமம் ரத்து செய்து மறுஏலம் விடப்படும் அவ்வாறு மறு ஏலத்தில் மாநகராட்சிக்கு நஷ்டம் ஏற்பட்டால் அவற்றினை உரிமதாரரிடம் இருந்து வசூல் செய்யப்படும். இந்த பொது நிபந்தனையை பின்பற்றி திரு.ஆ.ராதாகிருஷ்ணன் செலுத்தியுள்ள வைப்புத்தொகை ரூ.30,000/–ஐ பறிமுதல் செய்து பொதுஏலம் விடுவதற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது. |
| அ.கு. | 1) மன்றம் அனுமதிக்கலாம்,<br>2) அவசர அவசியம் கருதி மாண்புமிகு மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஏல நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் ஏற்கலாம். |
| 15) | இம்மாநகராட்சி கடை வாடகை உயர்வினை எதிர்த்து சென்னை, உயர்நீதிமன்றத்தில் திரு.சிங்கராஜ் மற்றும் பலர் இம்மாநகராட்சிக்கு எதிராக வழக்கு தொடர்நதனர். வழக்கு எண் W.P.No.14474/ 2019 ஆகும். இம்மாநகராட்சி சார்பாக 17.05.2019 அன்று ஆஜரான அப்போதைய கூடுதல் அட்வகேட் ஜெனரல் திரு.பி.எச்.அரவிந்த் பாண்டியன், வழக்கறிஞர் கட்டணம் ரு.15,000/– மற்றும் திரு.சி.வி.சைலேந்திரன், வழக்கறிஞருக்கு 1/3 கட்டணம் ரு.5,000/– ஆக கூடுதல் ரூ.20,000/– வழங்க கோரப்பட்டுள்ளது. மேற்படி தொகை ரு.20,000/– வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது. |
| அ.கு. | 1) மன்றம் அனுமதிக்கலாம்<br>2) அவசர அவசியம் கருதி மாண்புமிகு மேயர் அவர்களின் முன்அனுமதி பெற்று தொகை வழங்கியதை மன்றம் ஏற்கலாம். (14703/ 2021/ அ2) |
| 16) | கடலூார் மாநகராட்சி பொறியியல் பிரிவில் இயங்கி வரும் TN 31 F 7171 பதிவெண் கொண்ட ஈப்பிற்கு ஆயுள் காப்பீட்டை புதுப்பிக்க ஆகும் செலவினம் ரு.11,775/–க்கு நிர்வாக அனுமதியும், இச்செலவினத்தை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும், மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. |
| அ.கு. | 1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. மன்ற அனுமதி எதிர்நோக்கி மேற்படி தொகை ரு.11,775/–ஐ நேஷனல் இன்சூரன்ஸ் நிறுவனத்திற்கு செலுத்தியதை அங்கீகரிக்கலாம். (ந.க. எண் 1856/2022/இ2) |
| 17) | கடலூார் மாநகராட்சி மாமன்றத்திற்கு தேர்ந்தெடுக்கப்பட்ட மேயர் மற்றும் உறுப்பினர்களுக்கு ஒவ்வொரு மாமன்ற கூட்டத்திற்கும் அமர்வுப்படி ரூ.800/- வீதம் வழங்க ஒரு வருடத்திற்கு ஆகும் தோராய செலவினம் ரூ.4.50 இலட்த்திற்கு மன்ற அனுமதியும் இச்செலவினத்தை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும், முதல் இரண்டு மாமன்ற கூட்டத்திற்கு மேயர் மற்றும் உறுப்பினர்களுக்கு, மேயர் கடலூார் மாநகராட்சி அவர்களின் முன் அனுமதி பெற்று அமர்வுப்படி வழங்கப்பட்டதற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. |
| அ.கு. | மாமன்றம் அனுமதிக்கலாம் |
| 18) | கடலூார் மாநகராட்சி எல்லைக்குட்பட்ட 45 வார்டு பகுதிகளில் உள்ள அனைத்து தெருவிளக்குகளை பராமரிக்க தேவையான மின் உபகரணங்கள் கொள்முதல் செய்யும் |

பணிக்கு ரூ.9.90 இலட்சம் மதிப்பீட்டில் 24.01.2022 அன்று வேலை உத்தரவு வழங்கப்பட்டு ஒப்பந்ததாரரால் மின் உபகரணங்களை விநியோகம் செய்யப்பட்டு தெரு விளக்கு பராமரிக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. தற்சமயம் மின் உபகரணங்களின் இருப்பு குறைவாக உள்ளதாலும் , தெரு விளக்குகளை பராமரிக்க மின் உபகரணங்கள் கொள்முதல் செய்யும் பணிக்கு ரூ.9.90 இலட்சத்திற்கு மாமன்றத்தின் அனுமதியும், இச்செலவினத் தொகையை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மாமன்றஅனுமதி வேண்டப்படுகிறது.

**அ.கு.**

1, மாமன்றம் அனுமதிக்கலாம்
2. மாநகராட்சி மேயர் அவர்களின் முன் அனுமதிப் பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதற்கும் மாமன்றம் அனுமதிக்கலாம்.

**19)**

கடலூர் மாநகராட்சியில் பொது சுகாதாரப் பிரிவு 11 பிரிவுகளிலும் போதிய அளவு வாகனங்கள் இல்லாத காரணத்தால், பொது சுகாதார பிரிவு வானங்கள் பழுதடைந்து இயக்க இயலாத நிலையில் உள்ளன. பொது சுகாதார பிரிவில் குப்பைகளை சுத்தம் செய்ய போதிய அளவு வாகனங்கள் இல்லாத காரணத்தால் பணிகள் பாதிப்படைவதால், மாநகராட்சி வாகனங்கள் பழுது சரிசெய்யப்பட்டு இயக்க நிலைக்கு வரும் வரைக்கும் 5 டிராக்டர்களை மூன்று மாதங்களுக்கு தினசரி நாள் வாடகை அடிப்படையில் வாடகைக்கு எடுத்து பயன்படுத்த தகுதியான ஒப்பந்ததாரர் மற்றும் வாகன உரிமையாளர்களிடமிருந்து 15.03.2022–ம் தேதி முதல் 28.03.2022 ம் தேதி பிற்பகல் 3.00 மணி வரை ஒப்பந்தபுள்ளிகள் பெறப்பட்டது.

| வ. எண் | விவரம் | அளவு | திரு.ஆர். ரவிச்சந்திரன் ஒப்பந்ததாரர், கடலூர் ரூ. | திரு.பி.பற்குணம், ஒப்பந்ததாரர், கடலூர் ரூ. | திரு. ஆர். நவநீதம், ஒப்பந்ததாரர், கடலூர் ரூ. |
|---|---|---|---|---|---|
| 1 | டிராக்டர்கள், (நாள்வாடகை– டிராக்டர் ஒன்றுக்கு) | 1 | 3350/- | 3650/- | 3850/- |

வரப்பெற்ற ஒப்பந்தபுள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் மேற்கண்டவாறு தயார் செய்யப்பட்டு, அதில் குறைந்த விலை விகிதம் அளித்த திரு.ஆர்.ரவிச்சந்திரன், மாநகராட்சி ஒப்பந்ததாரர், கடலூர் என்பவருக்கு 5 டிராக்டர்களை மூன்று மாதங்களுக்கு (ஏப்ரல் –2022 முதல் ஜுன்–2022 வரை) அவர் ஒப்பந்தபுள்ளியில் அளித்த அதே விலைவிகிதத்திலேயே வாகனங்களை வாடகைக்கு வழங்குவதற்கான பணி உத்தரவு வழங்கவும், உபயோகப்படுத்தப்படும் வாகனங்களுக்கான மொத்த வாடகை தொகைக்கான செலவினத் தொகை ரூ.20,00,000 /– ஐ நகராட்சி நிதியிலிருந்து செலவு மேற்கொள்ளவும், மேயரின் முன்அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியமைக்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.கு.**

பொது சுகாதாரப்பிரிவு அவசியம் அவசரம் கருதி மன்றம் அனுமதிக்கலாம்.
ந.க. எண். 3062 /2022 /எச்2

**20)** கடலூர் மாநகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் இயங்கி வரும் TN.31.F.9842 டிப்பர் லாரி வாகனத்தின் தகுதி சான்று 22.04.2022 முதல் முடிவடைய உள்ளதால், தகுதிச் சான்று புதுப்பிக்க தேவையான பழுது நீக்க பணிகள் மேற்கொள்ள உள்ளூர் அரசு அங்கீகாரம் பெற்ற தகுதியான நிறுவனங்களிடமிருந்து ஒப்பந்தப்புள்ளிகள் கோரவும், அதற்கான தோராய செலவினத் தொகை ரூ.1,80,000/— ஐ நகராட்சி நிதியிலிருந்து செலவு மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.கு.** மன்றம் அனுமதிக்கலாம். ந. க. எண். 617 /2022 /எச்2

**21)** கடலூர் மாமன்றத்தின் வார்டுகள் குழுத் தலைவர்கள் மறைமுகத் தேர்தல் 30.03.2022 முற்பகல் நடத்தப்பட்டதில் தேர்ந்தெடுக்கப்பட்டவர் விபரம் மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும்.

மண்டலம் 1 (வார்டுகள் 1 முதல் 11 வரை)

| | |
|---|---|
| வார்டு எண் 7 | திருமதி. த. சங்கீதா. க/பெ தனச்செல்வம், 3/2 அங்காளம்மன் கோயில் தெரு, மஞ்சக்குப்பம், கடலூர் 1. செல் – 9791552102 |

மண்டலம் 2 (வார்டுகள் 12 முதல் 22 வரை)

| | |
|---|---|
| வார்டு எண் 12 | திரு. தா. பிரசன்னகுமார். த/பெ தாண்டவராயன், 43, ஈஸ்வர் நகர், கடலூர், கடலூர் 1. செல் – 9087443777 |

மண்டலம் 3 (வார்டுகள் 23 முதல் 33 வரை)

| | |
|---|---|
| வார்டு எண் 30 | திருமதி. செ. சங்கீதா. க/பெ கே. செந்தில்முருகன், 13 கே.வி.குப்பம் தெரு, பழைய வண்டிப்பாளையம், கடலூர் 3. செல் – 9080995503 |

மண்டலம் 4 (வார்டுகள் 34 முதல் 45 வரை)

| | |
|---|---|
| வார்டு எண் 37 | திரு. மு. இளையராஜா. த/பெ முத்துமணி, 125, சோனாங்குப்பம் தெற்குத் தெரு, கடலூர் 1. செல்–9677559798 |

கடலூர் மாமன்றத்தின் நிலைக்குழு உறுப்பினர்கள் மறைமுகத் தேர்தல் 30.03.2022 பிற்பகல் நடத்தப்பட்டதில் தேர்ந்தெடுக்கப்பட்டவர் விபரம் மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும்.

**நிலைக்குழு உறுப்பினர்கள்**

**கணக்குகள் குழு** உறுப்பினர்கள்

| வ.எண் | வார்டு எண் | மாமன்ற உறுப்பினரின் பெயர் |
|---|---|---|
| 1 | 42 | திருமதி. செ. விஜயலட்சுமி க/பெ அ. செந்தில், 56 ஏ, சுண்ணாம்புக்காரத் தெரு, கடலூர் முதுநகர். 9360555515 |
| 2 | 18 | திருமதி. அ. சுதா. க/பெ கோ. அரங்கநாதன், 8, புதுத் தெரு, புதுப்பாளையம், கடலூர் 1. செல்– 9367626877 |

| | | |
|---|---|---|
| 3 | 38 | திருமதி. ர. கவிதா. க/பெ ரகுராமன்,<br>70/16, மோகன்சிங் தெரு, கடலூர் துறைமுகம்.<br>செல்– 9976679352 |
| 4 | 33 | திரு. சோ. சக்திவேல். த/பெ சோமு,<br>8, குருமணி விநாயகர் தெரு, கொடிக்கால்குப்பம்,<br>வண்டிப்பாளையம், கடலூர் 1. செல்– 9787137973 |
| 5 | 1 | திருமதி.செ.புஷ்பலதா, 9, சுப்பையா நகர்,<br>எஸ்.என்.சாவடி, கடலூர் 1. செல்– 9894601982 |
| 6 | 19 | திருமதி. இ. செந்தில்குமாரி, க/பெ. இளந்திரையன்,<br>45, இளம்வழுதி நகர், வன்னியர்பாளையம்,<br>கடலூர் – 607 001. செல்– 9600627546 |

**பொது சுகாதாரக் குழு** உறுப்பினர்கள்.

| வ.எண் | வார்டு எண் | மாமன்ற உறுப்பினரின் பெயர் |
|---|---|---|
| 1 | 7 | திருமதி. த. சங்கீதா. க/பெ தனச்செல்வம்,<br>3/2 அங்காளம்மன் கோயில் தெரு, மஞ்சக்குப்பம், கடலூர் 1.<br>செல்– 9791552102 |
| 2 | 1 | திருமதி.செ.புஷ்பலதா, 9, சுப்பையா நகர்,<br>எஸ்.என்.சாவடி, கடலூர் 1. செல்– 9894601982 |
| 3 | 5 | திருமதி. ஐ. பார்வதி. க/பெ ரா. ஐயாசாமி,<br>33, வீட்டுவசதி வாரிய குடியிருப்பு,<br>வில்வநகர், கடலூர் 1. செல்– 9952745908 |
| 4 | 10 | திரு. கி. ராஜமோகன். த/பெ சே. கிருஷ்ணன்,<br>3 பி, கருமாரப்பேட்டை பிள்ளையார் கோவில் தெரு,<br>மஞ்சக்குப்பம், கடலூர் 1. செல்– 7092349999 |
| 5 | 22 | திருமதி. ரா. சுபாஷினி. க/பெ.ஆர். ராஜா,<br>10, பிள்ளையார் கோயில் தெரு,<br>சொரக்கல்பட்டு, கடலூர் – 607 001. செல்– 7502373818 |
| 6 | 39 | திரு. ர. பாலசுந்தர். த/பெ ரங்கநாதன்,<br>37 வெலிங்டன் தெரு, கடலூர் ஓ,டி. செல்– 9159447384 |

**கல்விக் குழு** உறுப்பினர்கள்

| வ.எண் | வார்டு எண் | மாமன்ற உறுப்பினரின் பெயர் |
|---|---|---|
| 1 | 36 | திருமதி. ச. ராஜலட்சுமி. க/பெ மோ. சங்கரதாஸ்,<br>7 புதுநகர், செல்லங்குப்பம், கடலூர் துறைமுகம்,<br>செல்– 8190084741 |
| 2 | 30 | திருமதி. செ. சங்கீதா. க/பெ கே. செந்தில்முருகன்,<br>13 கே.வி.குப்பம் தெரு, பழைய வண்டிப்பாளையம்,<br>கடலூர் 3. செல்– 9080995503 |
| 3 | 4 | மு. சரிதா. த/பெ முனுசாமி,<br>25/31, பகவதியம்மன் கோவில் தெரு,<br>வில்வநகர், கடலூர் 1. செல்–9789260357 |
| 4 | 15 | திருமதி. வி. மகேஸ்வரி. க/பெ விஜயகுமார்,<br>32, சுனாமி நகர், தேவனாம்பட்டினம், கடலூர் 1.<br>செல்– 9443409428 |

| | | |
|---|---|---|
| 5 | 10 | திரு. கி. ராஜமோகன். த/பெ சே. கிருஷ்ணன்,<br>3 பி, கருமாரப்பேட்டை பிள்ளையார் கோவில் தெரு,<br>மஞ்சக்குப்பம், கடலூார் 1. செல்– 7092349999 |
| 6 | 31 | திருமதி. ச. ஷாய்துன்னிசா. க/பெ சை. சலீம்,<br>1, சித்ரா நகர், திருப்பாதிரிப்புலியூர்,<br>கடலூார் 2. செல்– 9159922164 |

**வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு** உறுப்பினர்கள்

| வ.எண் | வார்டு எண் | மாமன்ற உறுப்பினரின் பெயர் |
|---|---|---|
| 1 | 33 | திரு. சோ. சக்திவேல். த/பெ சோமு,<br>8, குருமணி விநாயகர் தெரு, கொடிக்கால்குப்பம்,<br>வண்டிப்பாளையம், கடலூார் 1. செல்– 9787137973 |
| 2 | 44 | திருமதி. ஆ. கீர்த்தனா. க/பெ மா. ஆறுமுகம்,<br>22 திலக் நகர், பச்சையாங்குப்பம்,<br>கடலூார் துறைமுகம். செல்– 9842961533 |
| 3 | 42 | திருமதி. செ. விஜயலட்சுமி க/பெ அ. செந்தில்,<br>56 ஏ, சுண்ணாம்புக்காரத் தெரு,<br>கடலூார் முதுநகர். 9360555515 |
| 4 | 38 | திருமதி. ர. கவிதா. க/பெ ரகுராமன்,<br>70/16, மோகன்சிங் தெரு, கடலூார் துறைமுகம்.<br>செல்– 9976679352 |
| 5 | 25 | திரு. ஜெ. சசிகலா க/பெ. ஆர். ஜெயசீலன்,<br>100, நவநீதம் நகர், திருப்பாதிரிப்புலியுர்,<br>கடலூார் – 607 002. செல்– 9788441195 |
| 6 | 18 | திருமதி. அ. சுதா. க/பெ கோ. அரங்கநாதன்,<br>8, புதுத் தெரு, புதுப்பாளையம்,<br>கடலூார் 1. செல்– 9367626877 |

**நகரமைப்புக் குழு** உறுப்பினர்கள்

| வ.எண் | வார்டு எண் | மாமன்ற உறுப்பினரின் பெயர் |
|---|---|---|
| 1 | 26 | திரு. வே. சரஸ்வதி க/பெ. பீ.டி.ஜெ. வேலுசாமி ,<br>20, வெளிமோட்டான் தெரு,<br>திருப்பாதிரிப்புலியுர், கடலூார் – 607 002. செல்– 9698194245 |
| 2 | 17 | திருமதி. ஜா. கிரேசி. க/பெ ஜான்லிவிங்ஸ்டன்,<br>ஏ.எல்.சி.பீச் ரோடு, தேவனாம்பட்டினம்,<br>கடலூார் 1. செல்– 9942377332 |
| 3 | 39 | திரு. ர. பாலசுந்தர். த/பெ ரங்கநாதன்,<br>37 வெலிங்டன் தெரு, கடலூார் ஓ,டி. செல்– 9159447384 |
| 4 | 24 | திரு. அ. சரவணன், த/பெ. மு. அண்ணாமலை<br>75, மாரியம்மன் கோயில் தெரு,<br>கம்மியம்பேட்டை, கடலூார் – 607 002. செல்–9994826345 |
| 5 | 5 | திருமதி. ஐ. பார்வதி. க/பெ ரா. ஐயாசாமி,<br>33, வீட்டுவசதி வாரிய குடியிருப்பு,<br>வில்வநகர், கடலூார் 1. செல்– 9952745908 |
| 6 | 14 | திரு. தி. கண்ணன், த/பெ திருநாவுக்கரசு.<br>11/2, ரங்கநாதன் நகர், கடலூார் 1. செல்– 9443378345 |

**பணிகள் குழு** உறுப்பினர்கள்

| வ.எண் | வார்டு எண் | மாமன்ற உறுப்பினரின் பெயர் |
|---|---|---|
| 1 | 4 | மு. சரிதா. த/பெ முனுசாமி,<br>25/31, பகவதியம்மன் கோவில் தெரு, வில்வநகர், கடலூர் 1.<br>செல்–9789260357 |
| 2 | 11 | திரு. பா. அருள்பாபு,<br>த/பெ கோ. பாலசீனிவாசன், 3, தெற்கு கவரைத் தெரு,<br>மஞ்சக்குப்பம், கடலூர் 1. 9677809790 |
| 3 | 31 | திருமதி. ச. ஷாய்துன்னிசா. க/பெ சை. சலீம்,<br>1, சித்ரா நகர், திருப்பாதிரிப்புலியூர்,<br>கடலூர் 2. செல்– 9159922164 |
| 4 | 25 | திரு. ஜெ. சசிகலா க/பெ. ஆர். ஜெயசீலன்,<br>100, நவநீதம் நகர், திருப்பாதிரிப்புலியூர்,<br>கடலூர் – 607 002. செல்– 9788441195 |
| 5 | 43 | திரு. இ. பாரூக்அலி.<br>த/பெ அ.ல. இப்ராகிஹிம், 63ஏ, பள்ளிவாசல் தெரு, ,<br>கடலூர் முதுநகர். செல்– 9788564372 |
| 6 | 37 | திரு. மு. இளையராஜா. த/பெ முத்துமணி,<br>125, சோனாங்குப்பம் தெற்குத் தெரு, கடலூர் 1.<br>செல்– 9677559798 |

கடலூர் மாமன்றத்தின் நியமனக்குழு உறுப்பினர் மறைமுகத் தேர்தல் 31.03.2022 முற்பகல் நடத்தப்பட்டதில் தேர்ந்தெடுக்கப்பட்டவர் விபரம் மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும்.

**<u>நியமனக் குழு உறுப்பினர்</u>**

| வ.எண் | வார்டு எண் | மாமன்ற உறுப்பினரின் பெயர் |
|---|---|---|
| 1 | 17 | திருமதி. ஜா. கிரேசி. க/பெ ஜான்லிவிங்ஸ்டன்,<br>ஏ.எல்.சி.பீச் ரோடு, தேவனாம்பட்டினம்,<br>கடலூர் 1. செல்– 9942377332 |

கடலூர் மாமன்றத்தின் நிலைக் குழுத் தலைவர்கள் மறைமுகத் தேர்தல் 31.03.2022 பிற்பகல் நடத்தப்பட்டதில் தேர்ந்தெடுக்கப்பட்டவர் விபரம் மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும்.

## நிலைக்குழு தலைவர்கள்

**கணக்குகள் குழு தலைவர்**

| வ.எண் | வார்டு எண் | மாமன்ற உறுப்பினரின் பெயர் |
|---|---|---|
| 1 | 19 | திருமதி. இ. செந்தில்குமாரி, க/பெ. இளந்திரையன்,<br>45, இளம்வழுதி நகர், வன்னியர்பாளையம்,<br>கடலூர் – 607 001. செல்– 9600627546 |

**பொது சுகாதாரக் குழு தலைவர்**

| வ.எண் | வார்டு எண் | மாமன்ற உறுப்பினரின் பெயர் |
|---|---|---|
| 1 | 22 | திருமதி. ரா. சுபாஷினி. க/பெ.ஆர். ராஜா,<br>10, பிள்ளையார் கோயில் தெரு,<br>சொரக்கல்பட்டு, கடலூர் – 607 001.<br>செல்– 7502373818 |

**கல்விக் குழு தலைவர்**

| வ.எண் | வார்டு எண் | மாமன்ற உறுப்பினரின் பெயர் |
|---|---|---|
| 1 | 10 | திரு. கி. ராஜமோகன். த/பெ சே. கிருஷ்ணன்,<br>3 பி, கருமாரப்பேட்டை பிள்ளையார் கோவில் தெரு,<br>மஞ்சக்குப்பம், கடலூர் 1. செல்– 7092349999 |

**வரிவிதிப்பு மற்றும் நிதிக் குழு தலைவர்**

| வ.எண் | வார்டு எண் | மாமன்ற உறுப்பினரின் பெயர் |
|---|---|---|
| 1 | 25 | திரு. ஜெ. சசிகலா க/பெ. ஆர். ஜெயசீலன்,<br>100, நவநீதம் நகர், திருப்பாதிரிப்புலியூர்,<br>கடலூர் – 607 002. செல்– 9788441195 |

**நகரமைப்புக் குழு தலைவர்**

| வ.எண் | வார்டு எண் | மாமன்ற உறுப்பினரின் பெயர் |
|---|---|---|
| 1 | 14 | திரு. தி. கண்ணன், த/பெ திருநாவுக்கரசு.<br>11/2, ரங்கநாதன் நகர், கடலூர் 1. செல்– 9443378345 |

**பணிகள் குழு தலைவர்**

| வ.எண் | வார்டு எண் | மாமன்ற உறுப்பினரின் பெயர் |
|---|---|---|
| 1 | 31 | திருமதி. ச. ஷாய்துன்னிசா. க/பெ சை. சலீம்,<br>1, சித்ரா நகர், திருப்பாதிரிப்புலியூர்,<br>கடலூர் 2. செல்– 9159922164 |

**அ.கு.** மாமன்றத்தில் பதிவு செய்யலாம்.

| | |
|---|---|
| 22) | கடலூர் மாநகராட்சியில் 37 வார்டுக்குட்பட்ட புதிய சுனாமி இரண்டாவது குறுக்குத் தெரு, மூன்றாவது குறுக்குத் தெரு, பழைய சுனாமி குடியிருப்பு முதல் குறுக்குத் தெரு ஆகிய இடங்களில் பழுதடைந்த குடிநீர் குழாய்களை மாற்றி புதிய குடிநீர் குழாய்கள் அமைக்கும் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.6.80 இலட்த்திற்கு மாமன்றத்தின் அனுமதியும், இச்செலவினத் தொகையை குடிநீர் மற்றும் வடிகால் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மாமன்றஅனுமதி வேண்டப்படுகிறது. |
| அ.கு. | மாமன்றம் அனுமதிக்கலாம் (ந.க.எண். 8398/2011/இ2) |
| 23) | கடலூர் மாநகராட்சிகுட்பட்ட பகுதிகளில் 33 வார்டுகளில் பாதாளச் சாக்கடை திட்டம் பராமரிப்பு பணி மேற்கொள்ளவும், பாதாள சாக்கடை திட்டத்தின் கீழ் கழிவு நீர் சேகரிப்பு அமைப்பு, கழிவு நீரேற்று நிலையங்கள், நீரிரைப்பு நிலையங்கள், கழிவு நீர் சேகரிப்பு குழாய்கள், ஆளிறங்கும் தொட்டிகள் மற்றும் கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் ஆகியவற்றில் பாதாள சாக்கடை பராமரிப்பு மற்றும் இயக்குதல் பணியினை மாநகராட்சியின் மூலம் மேற்கொள்ள போதிய பணியாளர்கள் இல்லாத காரணத்தால் ( Out sourcing ) மூலம் வெளியாட்கள் மூலமாக பணி மேற்கொள்ள கீழ்கண்டவாறு கணக்கிடப்பட்டு |

| | | |
|---|---|---|
| PS & LS (Electrical Helper) | 32 நபர் X 556 X 90 | 1601280.00 |
| Driver Light | 2 நபர் X 663 X 90 | 119340.00 |
| Driver Heavy | 2 நபர் X 708 X 90 | 127440.00 |
| Sewer Workers | 10 நபர் X 558 X 90 | 502200.00 |
| Total | 46 நபர்கள் | 2350260.00 |
| ESI 4.75% | | 111637.35 |
| EPF 12% | | 282031.20 |
| LWF 1% | | 31000.00 |
| GST 12% | | 282031.20 |
| Contingencies and other unforces items | | 43040.25 |
| Total | | 3100000.00 |

| | |
|---|---|
| | வெளியாட்களை கொண்டு பாதாள சாக்கடை பராமரிப்பு மற்றும் இயக்குதல் பணிகளையும் மேற்கொள்ள மூன்று மாதத்திற்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.31.00 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி வழங்கவும், இச்செலவினத்தை குடிநீர் மற்றும் வடிகால் நிதியிலிருந்து மேற்கொள்ளவும், மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது. |
| அ.கு. | 1, மாமன்றம் அனுமதிக்கலாம்<br>2. மாநகராட்சி மேயர் அவர்களின் முன் அனுமதிப் பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதற்கும் மாமன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண். 2323 /2016/இ3) |
| 24) | கடலூர் மாநகராட்சி எல்லைக்குட்பட்ட 45 வார்டு பகுதிகளில் 8570 எண்ணிக்கை தெருவிளக்குகள் பராமரிக்கப்பட்டு வருகின்றன. தெருவிளக்குகள் இல்லாத மின் கம்பங்களில் புதியதாக 30W LED விளக்குகள் Fitting, with GI Pipe and Clamp sets ஆகியவை புதியதாக கொள்முதல் செய்யும் பணி ரூ.9.90 இலட்சத்திற்கு மேற்கொள்ள |

| | |
|---|---|
| | மாமன்றத்தின் அனுமதியும், இச்செலவினத் தொகையை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மாமன்றஅனுமதி வேண்டப்படுகிறது. |
| **அ.கு.** | மன்றம் அனுமதிக்கலாம் (ந.க.எண். 4096/2022/இ2) |
| **25)** | கடலூர் மாநகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண். 23 திருப்பாதிரிப்புலியூர், குப்பன்குளம் பகுதியில் சலவை தொழிலாளர்கள் சலவை செய்யும் கட்டிடத்திற்கு மின் இணைப்பு இல்லாததால் புதிய ஒரு முனை மின் இணைப்பு பெற மின் வாரியம் மூலம் மின் இணைப்பு வழங்க தோராய மதிப்பீடு ரூ.5000/- (ரூபாய் ஐந்தாயிரம் மட்டும்)-க்கு மாமன்றத்தின் அனுமதியும், இச்செலவினத் தொகையை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மாமன்றஅனுமதி வேண்டப்படுகிறது. |
| **அ.கு.** | மன்றம் அனுமதிக்கலாம் (ந.க.எண்.4095/2022/இ2) |

மாநகராட்சி அலுவலகம்
கடலூர்
நாள் 07.04.2022

மேயர்,
கடலூர் மாநகராட்சி.